தமிழ் முரசு

# புதிய தொழில்நுட்பத்துடன் கட்டிடம் கட்டவேண்டும்

## பொறியாளர் விழாவில் அப்துல் கலாம் பேச்சு

**ஆலந்தூர், செப். 6-** தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு நிறைவு விழா நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடந்தது. விழாவுக்கு சங்க மாநில தலைவர் என்.எஸ்.கவுரி சங்கர் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் டி.முருகேசன், துணை தலைவர் பஞ்சவர்ணம் முன்னிலை வகித்தனர். செயலாளர் கண்ணன் வரவேற்றார். இவ்விழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கலந்துகொண்டு நூற்றாண்டு மலரை வெளியிட, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குனர் டாக்டர் சி.ஐயம் பெருமாள் பெற்றுக் கொண்டார். பொறியாளர் சங்க வாழ்த்துபா சிடியை கலைமாமணி காயத்ரி பெற்றுக்கொண்டார்.

விழாவில் அப்துல் கலாம் பேசியதாவது:

பொறியாளர்களால் கட்டப்பட்ட அரசு கட்டிடங்கள், மேம்பாலங்கள், மருத்துவமனைகள், சாலைகள் அவர்களின் பெயர்களை சொல்லிக்கொண்டு இருக்கின்றன. பொறியாளர்களின் உழைப்பு கட்டிடத்தின் உறுதித்தன்மை இன்றும் நிலைத்து நிற்கிறது. தற்போதுள்ள பொறியாளர்கள் புதிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஐம்பது ஆண்டுக்கு முந்தைய கட்டிடங்களை ஆராய்ந்து அவற்றின் தரம், உறுதித்தன்மை போன்றவற்றை ஆய்வு செய்து அதுபோன்ற கட்டிடங்களை புதிய தொழில்நுட்பத்துடன் கட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப பசுமை கட்டிடங்கள், பயோ டாய்லட், மழைநீர் சேகரிப்பு போன்ற புதிய வசதிகளை செய்யவேண்டும். இவற்றின் மூலம் செலவீனங்களை குறைக்க வேண்டும். இதுபோன்ற கருத்தரங்குகளை பொறியாளர்கள் அடிக்கடி நடத்தி திறமையை வளர்த்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.